# கை கணினியினூடே செம்மொழி

## Mobile Tamil Keypads

G.Devarajan devarajan at gmail.com

Doc Version : 1.2 Dated : 27.04.2011

1) சுருக்க முன்னுரை
2) முன்னுரை
3) 12 Number Keypad-ன் இயலாமை
4) பயனரின் இயலாமை
5) இன்றைய கை சாதனங்கள் வகைகள்
6) இயக்க மென் பொருள்களின் வகைகள்
7) விசை பலகையின் வகைகள் & வசதிகள்
8) English/Tamil QWERTY Keypad
9) Touch Tamil Keypad - A Glance
10) Sபரிந்துரை
11) My Apps

### 1)சுருக்க முன்னுரை:

கணினிகள் சுருங்கி கைகளில் விளையாடும் நவீன தொழில்நுட்ப காலத்தில், நவீன தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப மொழியின் பயன்பாடு மற்றும் பயன்பாட்டிற்கான மாறுதல்களை எதிர்கொள்வது கட்டாயமாக உள்ளது.

1995-களுக்கு பிறகு ஒவ்வொரு இரண்டு ஆண்டிற்கும் கணினிகளை இயக்கும் மென்பொருள்கள் மாறிய வண்ணமாகவே உள்ளன. இவ்வகையான மாற்றத்தில், கணினிகளில் நமது செம்மொழியை பயன்படுத்துவதே மிகப் பெரிய சிக்கலாகி இருந்து வருகிறது, அப்படி இருந்தும் தமிழ் ஆர்வலர்கள் பலரின் சுய முயற்சிகளினால், ஆங்கிலமற்ற, உலக மற்றும் இந்திய மொழிகளை விட தமிழ் மொழி, கணினி மற்றும் இணைய பயன்பாட்டிலே சிறந்து விளங்குகிறது!

இருப்பினும், இப்படி மின்னல் வேகத்தில் கணினிகள் உருமாறி, இன்று கைபேசிகலாக நம் மடியிலே தவழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்திற்கு ஏற்ப நமது மொழியை பயன்படுத்தும் வரைமுறைகளை உற்று நோக்குவது மிகவும் அவசியமாக உள்ளது.

அவ்வகையான ஒரு உற்று நோக்கலின் பதிப்பு இந்த "கை கணினியினூடே செம்மொழி" கட்டுரை

2) முன்னுரை

2000 முதல் 2010 வரை, கிட்டடத்தட்ட பத்து வருடங்களாக, பல்வேறு கை பேசி தயாரிக்கும் நிறுவனங்கள் வித விதமான வகைகளில் கை பேசிகளை தயாரித்து கொண்டு வந்துள்ளன இவற்றில் உலக அளவில் மிக பிரசத்தி பெற்றவை Nokia, Sony, Ericsson, Apple மற்றும் Samsung நிறுவனங்கள்.

2004 ஆண்டிற்கு பிறகு, பெரிய மனம் படைத்த சில தன்னார்வலர்கள் தமிழ் சார்ந்த கை பேசிகலுக்கான ஆய்வுகளை மேற்கொண்டனர், இருப்பினும் 2010 வரை இவ்வகையான கை பேசிகளில், தமிழை பயன்படுத்துவது மிகவும் அரிதாகவே இருந்தது, 2010-ற்கு பிறகு தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக செம்மொழியை பரவலாக கை பேசிகளில் தமிழ் எழுத்துக்களை பார்க்க முடிந்தது.

**3) <u>12 Keys/பொத்தான்களின் இயலாமை</u>**

இருந்தும் மிகப் பொதுவான மற்றும் போராட்டமான பிரச்சனையாக இருந்து வருவது, அதிக அளவில் பயன்படுத்தப்படும் கை பேசிகளில் இருக்கும் வெறும் 12 பொத்தான்களே!. ஆங்கிலம் மற்றும் ஆங்கில அடிப்படையில் சார்ந்த மொழிகளை தவிர மற்ற எல்லா உலக மொழிகளுக்கும் இந்த 12 பொத்தான்கள் மிகப் பெரிய தடையாகவே உள்ளது. இது சம்மந்தமான பல்வேறு வகையான பரிந்துரைகள் பரிந்துரைக்கப்பட்டும் மொழிகளை கை பேசிகளில் புகுத்துவதில்/பயன்படுத்துவதில் சிரமமாகவே உள்ளது.

ஆனாலும், உலக புகழ் பெற்ற Nokia மற்றும் Motorola கை பேசி தயாரிப்பு நிறுவனங்கள் தனக்கே ஆன, மற்ற இந்திய மொழிகளை சார்ந்த அடிப்படையில் தமிழ் எழுத்துக்கள் அச்சிடப்பட்ட தமிழ் விசை பலகையுடனும், முற்றிலுமான தமிழ் Menu-வுடன் கைபேசிகளை, அணைத்து விற்பனை நிலையங்களில் வெறும் ரூபாய் 1500 முதல் விற்கப்படுவது மிகவும் மகிழ்ச்சியான மற்றும் பாராட்டக்கூடிய நிலைமையாக இருக்கிறது.

4) **<u>பயனரின் இயலாமை</u>**

கை பேசியை பயன்படுத்துவோர் இடையே தமிழ் மொழியை

பயன்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் மிக குறைவாகவே உள்ளது, இவற்றிற்கு பல காரணங்கள் இருப்பினும் மிக முக்கியமாக இருப்பது.

1) Lack of Nationalized standardization of Regional Mobile keypads by Linguistic organizations.
2) Availability of Mobile Phones with Tamil Characters Printed Keypad
3) No Strict Orders from State Governments to implement Tamil character printed keypads as mandatory before sale within state.
4) Negligence of Telecom service providers in promoting historical and classical languages.

இந்த சூழ்நிலையை மாற்ற மொழி சார்ந்த அரசு துறைகள் **Should issue a G.O. to Sell Mobile Phones within Tamilnadu with Tamil characters printed keypad as mandatory**) மற்றும் தனியார் துறைகள் முக்கியமாக (கை பேசி தயாரிப்பாளர்கள் மற்றும் தொலைபேசி சேவை நிறுவனங்கள் **பயனர்களை தமிழ் பயன்படுத்த ஊக்குவிக்கும் விதமான சலுகைகளை அறிமுகப்படுத்துவது**)

## 5) இன்றைய கை சாதனங்கள் வகைகள்

a) Hand Held Bus Ticket Prnters, & TNEB Bill Generators
b) Hand Held PDA & POS Terminals
(Tamil yet to get space in these kind of devices)
c) Mobile Phones
(Number pad based Mobiles, Button based QWERTY keypads & Touch based Qwerty Keypads)
d) Book Readers
(Mostly Touch based QWERTY Keypads)




## 6) கைபேசிகளின் இயக்க மென் பொருள்களின் வகைகள் மற்றும் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (OS & Device market Based on admob Web Requests 2010)

| OS Type | OS Owner | Tamil Fully Rendered | Qwerty Keyboard | Number Dial Keyboard | % of Market World | % of Market India |
|---|---|---|---|---|---|---|
| iOS(iPhone, iPad, iPod Touch) | Apple Inc | YES | Touch | | 40% | 3% |
| Android | Google Inc | NO | Touch/ Keys | Touch/Buttons | 25% | |
| BlackBerry | RIM | NO | Touch/Keys | | 6% | |
| Windows Mobile 7 | Microsoft | NO | Touch/Keys | | 4% | |
| Symbian | Symbian | YES/Partly | Touch/Keys | Buttons | 20% | 93% |
| Unknown | Chinese/Korean Models | NO | NO | Touch/Buttons | 5% | 4% |

Note : Source metrics.admob.com. % report is based on admob requests, May 2010.

**India Mobile Devices Share**

| | |
|---|---|
| Nokia (Symbian) | 42 % |
| LG & Samsung(Java OS) | 21% |
| Micromax, Gfive, Lava & Karbonn(Java OS) | 14% |
| Others Models(iPhone, Android, Windows) | 23% |

Note : Source based on Survey article year 2010(Approximate)

## 7) விசை பலகையின் வகைகள் & வசதிகள்

(Number Dial pad, QWERTY Pad, Virtual Key Pad)

## 12-ல் வசதிகள்

| Keypad Type | Number/Alphabet Keys | System/Function Keys |
|---|---|---|
| Number Dial Pad | 9 | 2~3 |
| Qwerty Keypad | 26 | 6~8 |
| Touch Keypad | 26 | 6 |

| | | | |
|---|---|---|---|
| ` ஃ 1 | அ, ஆ, இ ஈ, உ, ஊ 2 | எ, ஏ, ஐ,ஒ,ஓ,ஔ 3 |  |
| க ங ச ஞ 4 | ட ண த ந 5 | ப ம ய 6 | |
| ர ல வ 7 | ழ ள ற ன 8 | ஜ ஷ ஸ ஹ க்ஷ ஸ்ரீ 9 | |
| • T9Options & InsertSymbols | 0 Space & Line Break | # T9 On/OFF & Switch Tamil/English | Nokia 1661-2 Tamil Keypad, Rs1500 |

2010-ம் ஆண்டிற்கு பிறகு கை பேசிகளில் தமிழ் பயன்படுத்துவது ஓரளவில் அதிகரித்து வருகிறது, இந்த மாறுதலுக்கு மிக முக்கியமான காரணமாக இருப்பது தொடு வகை கை பேசிகள்.

இவற்றில் மிக முக்கியமாக குறிப்பிடத்தக்கது Apple நிறுவனத்தின் iOS-ல் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற திறமை வாய்ந்த கை பேசிகள்/கணினிகள். முக்கியமாக தமிழர்கள் அதிகம் வசிக்கும் நாடுகளான சிங்கப்பூர், மலேசியா, இந்தியா மற்றும் அமெரிக்கா.
இதில் அதிக அளவில் தமிழ் மென்பொருள்களை பதிவிறக்கம் செய்யும் நாடுகள்,
வரிசையில் 1) சிங்கப்பூர், 2) அமெரிக்கா, 3)இந்தியா 4) மலேசியா.

## 26-ல் வசதிகள்


மூன்று வகையான விசை பலகையில் தொடு விசை பலகையை தவிர மற்ற இரண்டிலும் உயிர் மற்றும் மெய் எழுத்தக்களை சேர்க்க இரண்டு அல்லது மூன்று முறைக்கு மேல் ஒரு பொத்தானை அழுத்தினால் மட்டுமே எழுத்துக்களை பதிவு செய்ய முடியும், ஆனால் வேகமாக பரவி வரும் தொடு வகை மற்றும் Text Animation தொழில் நுட்பங்கள் எந்த ஒரு மொழிக்கும் சாதகமாக பயன் படுத்தி மொழியை மிக எளிதாக பயன்படுத்திக்கொள்ளலாம். அப்படிபட்ட Text Animation மற்றும் Text Display Graphics-ல் மிக முக்கியமான இரண்டு விசைப்பலகை தொழில்நுட்பங்கள் கீழ்வருமாறு.

**<u>க) Continuous Tap gives optional keys</u> (iOS)**

ஒரு பொத்தானை தொடர்ச்சியாக தொடுவதினால் அந்த எழுத்தின் Unicode Dependent Sign சார்ந்த மற்ற எழுத்துக்கள் text display animation உதவியுடன் பயன்படுத்த எளிதாக்கப்படுள்ளன!




iOS  Keypad





Android  Keypad

**Dictionary  based   Word  formation  (Android)**

இந்த தொழில்நுட்பம் தொடர் வார்த்தைகள் மற்றும் Dictionary அடிப்படையிலான விசை பலகை, இந்த தொழில்நுட்பம் Google Transliterate அடிப்படையில் கை பேசி இயக்க மென்பொருள்களின் பயன்பாட்டில் கொண்டு வர இயலும்.

இந்த இரண்டு சக்தி வாய்ந்த தொழில்நுட்பங்கள் இனிவரும் தமிழ் விசைபலகைகளை ஒரு புதிய கோணத்தில் உற்று நோக்க வைக்கிறது.

**8)  Present  English/Tamil  Phonetic  Keyboard  :**




**புதிய கண்ணோட்டத்தில் தமிழ் தொடு விசை பலகை:**

ஒரு பொத்தானை தொட்டவுடன் Unicode Dependent Sign-ஐ  பயன்படுத்தி ஒரு எழுத்தை சார்ந்த மற்ற எழுத்துக்களை மிக எளிதாக இயக்கி பதிவு செய்யலாம்.


இந்த கண்ணோட்டத்தில் மிக முக்கியமான மாற்றம் இந்த கட்டுரையின் மூலம் முன் வைக்கப்படுவது,  **Re-Assign the Keys away from traditional English QWERTY type writer concept**. இந்த பரிந்துரைக்கு முக்கியமான காரணம்.

இந்த முறையின் மூலம் எழுத்துக்களின் தொடர்ச்சியையும், எழுத்துகளின் நிலைகளை, அந்த தொடர்ச்சியின் மூலம்  எளிதில் நினைவு படுத்த உதவும் என்பதும், அதுவும் தன்னிச்சை வாய்ந்த தமிழ் மொழியை ஆங்கில எழுத்துக்களின் வரிசை முறையில்  இருந்து பிரித்து மிக எளிதான முறையில் வடிவம் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

பரிந்துரைக்கப்படும் தொடு தமிழ் விசைப்பலகை கீழ் வருமாறு :-

## 9) Touch Tamil Keypad - A Glance

(Away from QWERTY & Typewriter key position thoughts)




**Hints : -**

- **Caps characters** can be formed logically typing by repeating the characters specially, vowels. Ex : அஅ = ஆ, referred to Unicode 6.0 Tamil Chart or with caps lock.
- **Dependent Signs** may be called when a key is pressed for more than a second, which gives options to select Dependent signs.

## 10) பரிந்துரை

1) **Setup Workgroup** consisting experts from device manufacturers and volunteers.

2) Define a **Common and Open Standard** which can be unique keypad concept on all major platforms, specially the platforms which positioned as top 4 Device Manufacturers & OS Developers

3) A Keypad concept which can be **Continuous in Tamil Characters Positions** (Vowels, Consonant & Unicode Dependant sign Order) and easy to remember with positions, an unique model for Tamil)

4) Tamil keypad which can use **Dynamic Display Systems** & **Word dictionary**.

## 11) Download my Tamil apps for iPhone/iPad

Aathichoodi : http://itunes.apple.com/in/app/aathichodi/id360404480?mt=8 (Free)
Thamizhil Thirukkural : http://itunes.apple.com/in/app/tamizhil-thirukkural/id339147635?mt=8 (Free)
Tamizh Quotes : http://itunes.apple.com/in/app/tamizh-quotes/id407218410?mt=8 (Free)
Tamizh Game : http://itunes.apple.com/in/app/tamizh-game/id414426616?mt=8 (Paid)

iTunes Store keyword: Tamil, Devarajan **** மிக்க நன்றி ***